# 50 நாள் உபவாச ஜெபம்
## ஜெப குறிப்புகள் #4

### ஜெப கவனம்: வட இந்திய அருட்பணி ஊழியங்கள்

1. வட இந்தியாவில் உள்ள சந்திக்கப்படாத எல்லைகளில் சபை ஸ்தாபிக்கும் ஊழியங்கள் எழும்ப ஜெபியுங்கள். பல வட இந்திய மாநிலங்களில், 1 விழுக்காட்டிற்கும் குறைவான கிறிஸ்தவர்களே உள்ளனர்!
2. தென் இந்திய ஸ்தல திருச்சபைகள், வட இந்திய அருட்பணி தரிசனத்தோடு எழும்பி தாலுக்காக்களையும் மாவட்டங்களையும் தத்தெடுக்க ஜெபியுங்கள்!
3. வடகிழக்கு இந்திய மாநில திருச்சபைகள் உயிர்மீட்சியடைந்து, ஒரு மகிமையான அறுவடை சேனையாக எழும்பி, சந்திக்கப்படாத வட இந்திய எல்லைக்குள் செல்ல ஜெபிப்போம்!
4. வட இந்தியாவில் தற்போது செயல்படுகின்ற மிஷனரிகளும் மிஷனரி ஸ்தாபனங்களும் ஓர் வீரியத்தோடு எழும்பி கூர்முனையோடு செயல்பட ஜெபிப்போம்!
5. வட இந்தியாவில் தற்போது செயல்படுகின்ற மிஷனரிகளும் மிஷனரி ஸ்தாபனங்களும் தங்கள் சத்துவத்தை அதிகரித்துக் கொள்ள ஜெபிப்போம். செய்யப்பட வேண்டிய இறைபணி அதிகம் இருப்பதால் இப்படி ஜெபிக்க வேண்டியுள்ளது!
6. முன்னோடி மிஷனரிகளுக்கும், சரியாக திட்டமிட்டு செயல்படுகின்ற மிஷனரி ஸ்தாபனங்களுக்கும் போதுமான ஊழிய உபகரணங்களும், பொருளாதாரமும் கிடைக்க ஜெபிப்போம்!!
7. வருகின்ற சில ஆண்டுகளுக்குள், புதிய அருட்பணி ஸ்தாபனங்கள் நூற்றுக்கணக்கில் எழும்பிட ஜெபிப்போம்! நிலுவையில் உள்ள இறைபணி ஏராளம் உள்ளதால் இது அவசியம் தேவை!!
8. ஒரே சிந்தை மற்றும் ஒரே தரிசனமுள்ள தலைவர்களும், ஸ்தாபனங்களும் இணைந்து செயல்பட ஜெபிப்போம்! இதினால் “கூட்டு வலிமை” தாக்கத்தை நாம் காண இயலும்!!
9. முன்னோடி மாற்று கலாச்சார அருட்பணியாளர்களும் சுதேசி சபை ஸ்தாபகர்களும், பிசாசு மற்றும் கிறிஸ்தவத்திற்கு எதிரான தீவிரவாத அமைப்புகளின் தாக்குதலுக்கு தப்பி பாதுகாக்கப்பட ஜெபிப்போம்!
10. ஆயிரக்கணக்கான ஆத்துமாக்கள் திரள் திரளாக இரட்சிக்கப்பட பரிசுத்த ஆவியானவரின் பலத்த கிரியைகள், வட இந்தியாவில் உள்ள சந்திக்கப்படாத எல்லைகளில் உண்டாக ஜெபிப்போம்!